# சங்க இலக்கியத்தில் இயற்கை

*வெ. பிரபாவதி*
உதவிப்பேராசிரியை, தமிழ்த் துறை
ஸ்ரீ பரமகல்யாணி கல்லூரி, ஆழ்வார்குறிச்சி

மலர்: 12

சிறப்பிதழ்: 1

மாதம்: மார்ச்

வருடம்: 2025

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI: https://doi.org/10.5281/zenodo.14958653

**முன்னுரை**

*தமிழ் இலக்கியங்கள் பண்பாடு நாகரிகம் ஆகியவற்றை தாண்டி காதல் வீரம் போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் தமிழ் இலக்கியத்தின் ஆரம்பகால படைப்புகளில் ஒன்றான சங்க இலக்கியம், கிமு 600 முதல் கிபி 300 வரையிலான காலகட்டத்தில் இயற்றப்பட்ட படைப்புகளின் தொகுப்பு. இது தமிழ் இலக்கியம் என்றும் அழைக்கப்படுகிறது சங்க இலக்கியங்களில் இயற்கை என்ற தலைப்பின் பற்றி இங்கு காண்போம்.*

**இயற்கை**

*இயற்கை என்பது இயல்பான மனித சக்தியை அல்லாமல் தானே தோன்றிய பொருள்கள் அனைத்தும் இயற்கை எனப்படும் பஞ்சபூதங்களான நிலம் நீர் காற்று நெருப்பு ஆகாயம் இவைந்தையும் இணைந்து உலகம் என்று கூறுகின்றோம் இதனை தொல்காப்பியர் தன் பாடல் வரிகள் மூலம் விளக்கியுள்ளார் இலக்கியங்களில் இயற்கை பல நூல்கள் எழுதி உள்ளன சங்க இலக்கியங்களில் நற்றிணை அகநானூறு புறநானூறு பத்துப்பாட்டு போன்ற பல நூல்கள் இயற்கையைப் பற்றி பதிவுகள் தெளிவுப்படுத்துகின்றன*

**சங்க இலக்கியத்தில் இயற்கை**

*சங்க இலக்கியத்தில் ஔவையார் பாடிய பாடல்களான ஐம்பத்தொன்பதுள் அகம் பற்றியன இருபத்தாறு; புறம் பற்றியன முப்பத்து மூன்று பாடல்கள். இவரது பாடல்களில் இயற்கை வருணைகள் இடம் பெற்றுள்ளன. புறப்பாடல்களையும் இணைத்து நோக்குமிடத்து எல்லா நில வருணைகளும் இடம் பெற்றிருக்க காணலாம்; ஆயினும் மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சிக் காட்சிகள் பெருவாரியாகப் பாடப்பட்டுள்ளது. முல்லை முதலான ஏனைய இயற்கை ஓவியங்கள் குறைவே என்கிறார் மு.வரதராசனார்.*

**நற்றிணை**

*நற்றிணையில் முல்லைத் திணையில் மூன்றும், நெய்தல் திணையில் இரண்டும், மருதத் திணையில் ஒன்றும், குறிஞ்சியில் ஒன்றும் என ஔவையார் ஏழு பாடல்களைப் பாடியுள்ளார். இடி, மின்னல், என மாலை நேரம் மழை வருவதற்குரிய நிலைகளை வருணிக்கிறார்.*

**கேழ்கிளர் உத்தி அரவுத் தலை பனிப்ப**
**படுமலை உருமின் உரற்று குரல்**
**(நற்-129;7,8)**

மேகத்தின் திரள் மலையடுக்கின் சாரலில் வாழும் பாம்புகள் பயப்படுமாறு விரைந்தெழும் இடியோசையானது வருத்துகிறது என, இடியின் துணையுடன் காற்றோடு கலந்து வரும் மேகத் திரளானது அனைவரையும் அஞ்சச் செய்கிறது என்பதைக் கூறுகிறார்.

கதிரவனின் மறைவு கதிரவன் மலையின் பின்பு சென்று மறைந்தான் என்பதை இதழ் குவிந்த நெய்தல் மலரும் மலர்ந்தது. மாலை நேரத்தில் மேற்குத் திசையில் கதிரவன் மறைந்தான், அதனால் கிழக்குத் திசையில் நிழல்கள் நீண்டன, ஞாயற்றின் தோற்றமானது செந்நிறமாகத் தோன்றியது; நிலத்தின் வெப்பம் தணிந்தது என்று வருணிக்கிறார். மேலும்,

**காயாக் குன்றத்துக் கொன்றை போல**
**மாமலை விடரகம் விளங்க மின்னி**
**வியலிரு விசும்பகம் புதையப் பாஅய்ப்**
**பெயல் தொடங் கினவே பெய்யா வானம்**
**(நற்-371)**

நீலநிறமுடைய வானமானது கருநிற மேகத்தை மறைத்துள்ளது என்றும், அம்மேகக் கூட்டத்திடையே தோன்றும் மின்னல் ஒளியால் பெரிய மலையகத்திலிருந்த பிளவுகளைக் காண முடிகின்றது என்றும், வானகத்தில் தோன்றும் மின்னல் ஒளியானது பளிச்சென வீசிய மேகத்திரளானது மழை பொழியத் தொடங்கியது என்கிறார்.

## அகநானூறு

அகநானூற்றில் அவ்வையின் நான்கு பாடல்களும் பாலைத் திணைக்கு உரியனவாக அமைகின்றன.

சூரியன்: வானம் ஊர்ந்த வயங்குஒளி மண்டிலம் (அகம் -11)வானத்தில் ஓங்கி உயர்ந்து விளங்கும் நெருப்பு பந்தானது பூமியில் உள்ள அனைவருக்கும் நல்லவர் கெட்டவர் என்ற எவ்வித பாகுபாடும் இல்லாமல் வெளிச்சத்தைத் தருகிறது என்று பாடுகிறார்.

பறவையும் பூமாலையும்

**விசும்பு விசைத் தெறித்த கூதளங் கொதையின்**
**பசுங்கால் வெண்குருகு (அகம்273:1-2)**

கூதள மலர்களைக் கொண்டு கட்டிய ஒரு மாலையினை வானில் வீசி எறிந்தால் எப்படி இருக்குமோ, அவ்வாறு இருந்தது என்று பறக்கும் நாரைகளின் கூட்டத்தை வருணித்துப் பாடுகிறார். அழகிய நீல வானத்தில் மேகமானது இருள் சூழ்ந்து காணப்படுகிறது.

மிகப்பெரிய கொல்லிமலையின் உச்சியில் தோன்றும் நீரானது வேகமாக பெருக்கெடுத்து ஓடிவந்து கீழே வீழ்கின்ற அருவியாக காட்சியளிக்கிறது என்பதை விளக்குகிறார்.

## புறநானூறு

சங்க அகப்பாடல்களைப் போன்று புறப்பாடல்களில் இயற்கை அதிகமாக இடம் பெறவில்லை. இதற்கான இயற்கையின் தன்மை இடம்பெறுவது குறித்த காரணங்களை ஆராய்ந்த வ. சுப. மாணிக்கம், வீரம், கொடை, புகழ் என்பனவெல்லாம் புறத்திணைப் பொருளான இத்திணைக்கு முதற்பொருள், கருப்பொருள் என்று அவர் கூறவில்லை. புறப்பாடல்களிலும் முதலும் கருவுமாகும் அமைப்பு முறையனாது காணவில்லை (வ. சுப. மாணிக்கம்-தமிழ்க் காதல்-ப.208) என்கிறார். ஆதலால் பொதுவாக சங்க இலக்கிய புறப்பாடல்களில் இயற்கைகான இடமும் குறைவாகவுள்ளது. புறநானூற்றில் முப்பத்துமூன்று பாடல்கள் ஔவையார் பாடியுள்ளார். புறப்பாடல்களில் போர், அறம், அரசியல் என்ற நிலைகளில் தான் பெரும்பாலும் காணப்படுகிறது; எனினும் இயற்கையைப் பற்றி சிற்சில இடங்களில் வருணிக்கப்படுகிறது,

ஞாயிறும் திங்களும்: தகடூரில் நல்லாட்சி புரிந்து வந்த அதியன், சேரனுடன் போர்புரிந்து உயிர் துறந்தான். அதனைக் கண்ட அவ்வை அவன் ஆட்சியின் தன்மைக்கும் புகழுக்கும் திங்களையும் ஞாயிற்றையும் ஒப்பிட்டு கூறுகிறார்,

**திங்க ளன்ன வெண்குடை**
**ஒண் ஞாயி றன்னோன் புகழ்மா யலவே**
**(புறம் 231;5-6)**

*அதியனின் ஆட்சி திங்களைப் போல குளிர்ச்சி உடையது; அதியனின் புகழானது ஞாயிற்றைப் போன்றது; ஞாயிற்றின் (கதிரவனின்) ஒளியை என்றுமே யாராலும் மறைக்க முடியாது. அதே போன்று அதியனின் புகழையும் மறைக்க முடியாது என்பது இவ்வரிகளின் பொருளாகும்.*

**குறுந்தொகை**

*சங்கப்புலவர்களின் சூழல் பார்வையையும் உயிர்ம நேயத்தையும் காட்டுகிறது.*

***நமக்கொன் றுரையா ராயினுந் தமக்கொன்***
***றின்னா விரவி னின்றுணை யாகிய***
***படப்பை வேங்கைக்கு மறந்தனர் கொல்லோ***
***துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே.***

***(குறுந்-266 )***

*எனத் தலைவன் வரைந்து கொள்ளாமல் பிரிந்த காலத்தில் தனக்குத் தூது அனுப்பாவிட்டாலும் இரவுக்குறி வந்தொழுகிய காலத்தில் நம்மோடு இனிய துணையாக இருந்த வேங்கை மரத்திற்காவது புள்வாய்த் தூது அனுப்பலாகாதோ என ஏங்கும் தலைவியின் நிலை சுட்டப்படுகிறது. வேங்கை மரத்தை அஃறிணைப் பொருள் என எண்ணாமல் தனக்கும் தலைவனுக்கும் இனிய துணையென உயிரோடு உணர்வும் ஏற்றிக் கூறுவதுடன் வேங்கைக்குத் தூதாகப் பறவையைத் தேர்தல் சூழலியையும் நேயமும் வெளிப்படக்காட்டுகிறது.*

**பத்துப்பாட்டில் இயற்கை**

*இலக்கியங்களில் வருணனைகள்ஒரு படைப்பாளன், தன் சிந்தனையில் தோன்றும் காட்சிகளைப் படிப்பவர்களின் மனக்கண் முன்பே கொண்டுவரும் உத்திதான் வருணனை முறை. கற்பனையும் வருணனையும் இல்லாத எந்தவொரு படைப்பும் சிறந்த இலக்கியமாகாது. அந்த வகையில்விட்டுச்செல்லக் கூடிய உயிர் நிலையில்லை என்பதை,*

***"படைப்புப்பலபடைத்துப்பலரோடுண்ணும்***
***உடைப்பெருஞ் செல்வ ராயினும் இடைப்படக்***
***குறுகுறு நடந்து சிறுகை நீட்டி***
***இட்டுந் தொட்டுங் கவ்வியும் துழந்தும்***
***நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்***
***மயக்குறு மக்களை யில்லோர்க்குப்***
***பயக்குறை யில்லாத் தாம்வாழும் நாளே"***

***(188)***

*குழந்தையின் நடையழகையும், தொட்டும் இட்டும் தவழ்ந்தும் விளையாடும் மகிழ்ச்சியையும் நெய்பிசைந்த சோற்றினை தம் மேலெல்லாம் பூசிக்கொண்டு அது செய்யும் குறும்பினையும் நம் கண்முன்னே ஓவியமாகத் தீட்டுகிறது இப்பாடல்.*

*பத்துப்பாட்டில் வரும் ஆற்றுப்படைகளில் தமிழ்நாட்டின் இயற்கை அமைப்புகள் நன்கு வருணிக்கப்படுகின்றன. பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை அல்லது மலைபடுகடாம் ஆகியவற்றுள் கூறப்படும் யாழ் வருணனைகள் மிகச்சிறப்பாகப் போற்றப்பட வேண்டிய கலை நுட்பச் செய்திகளாகும்.*

*பொருநராற்றுப்படையில் வரும் அழகிய பாடினியின் கையில் உள்ள இனிய பாலையாழ் பற்றிய வருணனை இயற்கையோடு இயைந்தது.*

***"குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்***
***விளக்கழ லுருவின் விசியுறு பச்சை***
***எய்யா இளஞ்சூற் செய்யோ ளவ்வயிற்று***
***ஐதுமயி ரொழுகிய பொதியுறு போர்வை..."***

***பொருந-420)***

*"பாலையாழ்" ஆனது மானின் குளம்பு அழுத்திய இடம்போல இருபுறங்களும் தாழ்ந்து நடுவுயர்ந்த பந்தலை உடையது. இளஞ்சூல் கொண்ட சிவப்பான பெண்ணின் வயிற்றிலுள்ள மென்மையான மயிரொழுங்குபோல, இருபுறமும் சேர்த்துக் கட்டப்பட்ட தோற்போர்வையை உடையது. வளையில் வாழும் நண்டின் கண் போன்ற துளைகளின் வாயை மறைத்தற்குரிய ஆணிகளை உடையது. எட்டாம் நாள் திங்களின் வடிவுகொண்ட வறிய வாயை உடையது. அந்த யாழின் கரிய தண்டு, தலையெடுத்த (படம் எடுத்த) பாம்பைப் போன்றது. அதில் ஒன்றோடொன்று இறுகக் கட்டப்பட்டு அமைந்த வார்க்கட்டுகள் கருநிறப் பெண்ணின் முன்கையில் அணியப்பட்ட தொடிகளை ஒக்கும். அழகிய குத்தலரிசியையொத்த விரலசைக்கும்*

குற்றம் நீங்கிய நரம்புகளை உடைய அவ்யாழ், அழகிலே மணமகளை ஒக்கும்" இவ்வாறு பாலையாழ் வருணனையில் பல நுட்பமான உவமைகள் கையாளப்பட்டுள்ளன.

இதேபோன்று சங்கப் பாடல்களில் வருணனை முறையானது நம்நாட்டின் பண்பாடு, கலாசாரம், ஒழுக்கம் ஆகியவற்றை உள்ளடக்கிய சிறந்த வழிமுறையாகும். வருணனைத் திறம் கொண்ட கணக்கிலடங்கா பாடல்கள் நம் சங்க இலக்கியங்களில் உள்ளன. அவை நம் தமிழர் தம் வாழ்வியல் உண்மைகளை உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

**முடிவுரை**

ஒரு படைப்பாளன் தன் சிந்தனையில் தோன்றும் காட்சிகளை படிப்பவர்கள் மனக்கண் முன்னே கொண்டுவர படைக்கப்படுவதே இலக்கியங்கள் ஆகும் கற்பனையும் வர்ணனையும் இல்லாத எந்த ஒரு படைப்பும் சிறந்த இலக்கியம் ஆகாது அதில் இயற்கை அதிகமாக இலக்கியங்களில் பேசப்படுகின்றன அவற்றில் நற்றிணை, அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பத்துப்பாட்டு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு சங்க இலக்கியத்தில் இயற்கை என்ற தலைப்பை பற்றி விரிவாக பார்த்தோம்.